உரிமைக் குழுவிற்குப் பேரவையினால் ஒரு பிரச்சினை ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அனுப்பப்பட்ட பிறகு அப்பிரச்சினை உரிமைக் குழுவின் ஆய்வில் இருக்கும்போது, அது குறித்துச் சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது வெளியாரோ அல்லது பத்திரிகைகளோ விவாதம் அல்லது விமர்சனம் செய்வதோ அல்லது அத்தகைய விவாதத்தை அல்லது விமர்சனத்தை பத்திரிகைகளில் வெளியிடுவதோ தண்டனைக்குரிய அவை உரிமை மீறிய செயலாகும். இத்தகைய சட்டப் பேரவையின் விதிமுறைகளைக் கருத்தில்கொண்டு அவை உரிமையை மீறும் செயலில் ஈடுபடாமல் பத்திரிகைகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் செயல்பட வேண்டுமென்பது சட்ட நிலை என்பதனைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். பத்திரிகைகளும் சட்டமன்ற உறுப்பினர்களும் சட்டப்பேரவையின் விதிகளுக்கு மதிப்பளித்து அவையின் கண்ணியத்தைக் காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் திரு. கருணாநிதி, இந்தப் பிரச்சினை குறித்து இனியும் வெளியில் எதுவும் பேசுவதையோ எழுதுவதையோ தவிர்த்து, ஏற்கெனவே இந்தப் பிரச்சினை அவை உரிமைக் குழுவின் ஆய்வில் உள்ளதால், சட்டப்பேரவை விதிமுறைகளைக் கடைப்பிடித்து, அவை உரிமைக் குழுவிற்கு நேரில் வந்து, இந்தப் பிரச்சினை குறித்த தன்னுடைய விளக்கங்களையும், ஆதாரங்களையும் அவை உரிமைக் குழுவில் தந்து தனது நிலையினைத் தெரிவிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை குறித்து அவை உரிமைக் குழுவினுடைய ஆய்வும் முடிவும் அவையில் அறிவிக்கப்படும் வரை, இப்பிரச்சினை குறித்துப் பத்திரிகைகள் உட்பட எவரும் வெளியில் விவாதிக்கவோ, விமர்சிக்கவோ அல்லது வெளியிடுவதோ கூடாது என ஆணையிடுகிறேன். இத்துடன் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வடரங்கம் ஊராட்சி அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சந்திரமோகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.

2004 ஜூலை 28]

***திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரங்கம் ஊராட்சியில் கொள்ளிடம் ஆற்றில் கடல் நீர் மேலேறுவதனால் குடிநீர் உவர் நீராக மாறுவதைத் தடுக்க, வடரங்கம் ஊராட்சி அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்டவேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.53.92 இலட்சங்களுக்கு (2003–2004 ஆம் ஆண்டிற்கான விலை விகிதப்படி) தளப்பொறியாளர்களால் தயாரிக்கப்பட்டு தற்போது தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம் அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் கீழ்க்கண்ட பயன்கள் அடைய வாய்ப்புள்ளது.

1) நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

2) கடல்நீர் உட்புகுவது தடுக்கப்படும்.

3) நீரேற்று நிலையங்களுக்கு மேல் மட்டத்திலேயே நீர் கிடைக்கும்.

தலைமைப் பொறியாளர் திட்ட உருவாக்கம் பரிசீலனைக்குப் பின் அவரது அறிக்கைக்கிணங்க நிர்வாக ஒப்புதல் வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். திட்ட உருவாக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும், திட்ட உருவாக்கத்தின் பரிசீலனைக்குப் பிறகு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படும் என்றும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்

[திரு. நா. சந்திரமோகன்] [2004 ஜூலை 28

அறிவித்துள்ளார்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடரங்கம் ஊராட்சிக்கு அருகே கொள்ளிடம் ஆற்றில் உபரியாகக் கலக்கும் தண்ணீரைத் தேக்கம் செய்து குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும் பயன்படுத்திட வேண்டும். கோடைகாலங்களில் கடல் நீர் மேலேறுவதைத் தடுக்கவும் குடிநீர் உவர் நீராக மாறுவதைத் தடுக்க வேண்டும். கடல்நீர் மேலெழுவதால் இப்பகுதியில் 10 கிமீ. சுற்றியுள்ள நாதன்படுகை, திட்டுப்படுகை, அளக்குடி, மகேந்திரபள்ளி, காட்டூர், செம்மங்காடு, சரஸ்வதிவிளாகம், அனுமந்தபுரம் போன்ற கிராமங்களில் குடிநீர் எல்லாம் கடல்நீராக, உவர் நீராக மாறிவிடுவதாலும், நிலத்தடி நீர் உவர் நீராக மாறிவிடுவதாலும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் சூழ்நிலையில் உள்ளது. எனவே, சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்திட மேற்கண்ட வடரங்கம் ஊராட்சி அருகே ஒரு ரெகுலேட்டரை அவசியம் கட்டிக் கொடுக்க வேண்டும். மேலும் கொள்ளிடம் ஆற்றிலிருந்துதான், சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இதன் அவசியம் கருதி, இவ்வாண்டே இப்பணியை எடுத்து முடித்துத் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, வடரங்கம் அருகே கடற்கரையிலிருந்து 12–வது கிலோ மீட்டரில் மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள இடத்தில், Regulator கட்டுவதற்குக் கோரியுள்ள இடத்தில் ஆற்றின் இயற்கையான அமைப்பு மற்றும் கரைகளின் தன்மை Regulator கட்ட சாத்தியமாக இல்லை. இருப்பினும் கடல்நீர் மேலேறி, குடிநீர் உவர் நீராக மாறுவதைத் தடுக்க ஆற்றின் தளமட்டத்திற்குக் கீழ் ஒரு துணை மேலணை Sub-surface bed dam கட்டினால் கடல்நீர் ஊடுருவுவது முழுவதுமாகத் தடுக்கப்படும். இதற்கான முன்னோடி அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் விவர மதிப்பீடு தயாரித்து, திட்ட உருவாக்கம் தலைமைப் பொறியாளர் அவர்களது பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நியாயமான கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு அம்மாவின் அரசு இதைக் கனிவுடன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.